பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 182

புதன்கிழமை
28 மே 2025

வைகாசி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை


## அமைச்சரவை மாற்றமில்லை

கொழும்பு, மே 28
அமைச்சரவையில் மாற்றங்கள் எவையும் ஏற்படாது என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.
அமைச்சரவையில்மாற்றங்கள் 15

### காணி சுவீகரிப்பதற்கான

# வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற்றது அரசாங்கம்!

கொழும்பு, மே 28
வடக்கு மாகாணத்தில் காணி சுவீகரிப்புத் தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. 15

## காலக்கெடுவுக்கு முன்னதாக மீளப்பெறப்பட்ட வர்த்தமானி!

### சுமந்திரன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், மே 28
காணி சுவீகரிப்புத் தொடர்பில் வெளியாகியிருந்த வர்த்தமானி அறிவித்தல், நாம் விதித்திருந்த காலக்கெடுவுக்கு முன்னர் மீளப்பெறப்பட்டுள்ளது - இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் 15

## நீண்ட முயற்சிக்கு கிடைத்த வெற்றி!

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 28
வடக்கு மாகாணத்தில் காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் திரும்பப் பெறப்பட்டமை, நீண்ட முயற்சிக்குக் 15

## பிரபாகரனை உயிருடன் ஒப்படைக்குமாறு கப்பலை அனுப்பியதாம் அமெரிக்கா!

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, மே 28
இறுதிக்கட்டப் போரின் போது பிரபாகரன், பொட்டு அம்மான் உள்ளிட்டவர்களை அமெரிக்கா உயிருடன் கோரியிருந்தது. அதற்காக கப்பலொன்று கூட அனுப்பிவைக்கப்பட்டிருந்தது என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரி 15

### சத்திரசிகிச்சைக்குப் பின்னர்

## மயங்கிச் சரிந்த பெண் சிகிச்சையின்போது பலி

யாழ்ப்பாணம், மே 28
பித்தப்பையில் உள்ள கல்லை நீக்குவதற்காக சத்திரசிகிச்சை செய்துகொண்ட பெண், சத்திரசிகிச்சையைத் தொடர்ந்து மயக்கமடைந்து, மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் - நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த துஷ்யந்தன் நிரோஷா (வயது - 37) என்ற பெண்ணே 15

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன் பதவிநீக்கம்

### தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்குவந்த ஏழு மாதத்தில் மூன்றாவது தலைமை

யாழ்ப்பாணம், மே 28
பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன், நேற்றுமுதல் நடைமுறைக்குவரும்வகையில் உடனடியாக தற்காலிக பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
ஊழியர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் மற்றும் பாரபட்சமான நடவடிக்கைகள் காரணமாகவே அவர் பதவி நீக்கப்பட்டுள்ள 15



முச்சந்தி முரளி

‘அப்ப உந்த வர்த்தமானியை வைச்சு வாக்கு வங்கியை பெரிசாக்க போட்ட பிளானெல்லாம் பாழாப்போச்செண்டு சொல்லுங்கோ’

## முதலமைச்சர் வேட்பாளராக தும்புத்தடியாம்

### ஊடகவியலாளர்களிடம் கஜேந்திரகுமார் கிண்டல்

யாழ்ப்பாணம், மே 28
தற்போது வெளிவரும் முதலமைச்சர் வேட்பாளர்களின் பெயர்களை கருத்திற்கொண்டால் நாங்கள் ஒரு தும்புத்தடியை வேட்பாளராக நிறுத்தலாம் என நினைக்கிறோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
மாகாணசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் முதலமைச்சர் 15

## போதைக்கு அடிமையான யுவதிக்கு புனர்வாழ்வு!

விரிவு பக்:-15

## தும்புத்தடி வேட்பாளர் கருத்தை உடன் திரும்பப் பெறவேண்டும்!

### கஜேந்திரகுமாரிடம் பஷீர் காக்கா கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 28
தற்போது வெளிவரும் வேட்பாளர்களின் பெயர்களைக் கருத்திற்கொண்டால், நாங்கள் ஒரு தும்புத்தடியை முதல்வர் வேட்பாளராக நியமிக்கலாம் என்று கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவித்த கருத்து, தமிழ்த் தேசியத்தை நலினப்படுத்தும் செயல் என்று மூத்த போராளி பஷீர் காக்கா கண்டித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் 15




அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

ashok STEEL
நீடித்த வலிமை

மத்திய மாகாணம் - 0773825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
வட கிழ மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் டொன் இற்கு ரூ. 232,000 + VAT

SIS
375


மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4084 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 10 13 25 51 |
| விசேட எழுத்து | M |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1151 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 25 27 40 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0110 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 4 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2190 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 11 30 49 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5842 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 6 6 6 9 8 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1872 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 04 19 45 77 |
| விசேட எழுத்து | I |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0417 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 6 9 8 8 |

# இலங்கையில் முதன்முறையாக பயங்கரவாதிகள் கையில் ஆட்சி

## உதயகம்மன்பில கூறுகின்றார்

**கொழும்பு, மே 28**

**இலங்கையில் முதற்தடவையாக பயங்கரவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்கள். முன்னாள் பயங்கரவாதி நாட்டின் தலைவராகியுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி எம்முடன் இணைந்து புலிகளுக்கு எதிராகப் போராடிய பிள்ளையான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். புலிகள் பக்கத்தில் இருந்த எவரும் கைது செய்யப்படவில்லை. சிறையில் இருக்கும் புலிகளை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியுள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள புலிகளுக்கு இங்கு வந்து முதலீடு செய்யுமாறு அழைப்புவிடுக்கிறார். பழையவற்றை மறந்து ஒன்றாகச் செயற்படுவோம் என்கிறார்.

ஜனாதிபதிக்கு நெருக்கமாகத் தெரிபவர்கள் புலிகளே அன்றி புலிகளுக்கு எதிராக சண்டையிட்டு நாட்டை மீட்ட படையினர் அல்ல. இராணுவத்தை இராணுவ வீரர்கள் என்று அழைக்க மறுக்கிறார். வெறுமனே சிப்பாய்கள் என்று கூறுகிறார். ஜே.வி.பி.யின் பயங்கரவாதச் செயற்பாட்டைபணியினர் அடக்கியதன் விளைவே இது - என்றார். (எ-75)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0550 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 1 1 8 0 0 4 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2816 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 04 43 55 79 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 40 41 73 76 |
| வெற்றி வாரம் | 4977 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0691 |
| வெற்றி இலக்கம் | 07 34 39 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| விருச்சிகம் | |
| வெற்றி இலக்கம் | 05 16 29 58 |
| சீட்டிழுப்பு வாரம் | 4528 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 28 |
| வெற்றி இலக்கம் | 21 27 50 63 |
| வெற்றி வாரம் | 1992 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 10 20 31 34 |
| வெற்றி வாரம் | 2642 |

# போலந்து அமைச்சர் இலங்கை வருகை

கொழும்பு, மே 28

ஐரோப்பிய ஒன்றிய மன்றத்துக்குத் தலைமை வகிக்கும் போலந்துக் குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ரெடொஸ்லாவ் சிகோர்ஸ்கி நாளைமுதல் எதிர்வரும் 31ஆம் திகதிவரை இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

சிகோர்ஸ்கி வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் பிரதிநிதியும், ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவருமான காஜா கலாஸைப் பிரதிநிதித்துவப்படுத்தியே இலங்கைக்கு வரவுள்ளார்.

இந்தப் பயணத்தில் போலந்து வெளியுறவு அமைச்சர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரை மரியாதை நிமித்தமாகச் சந்திக்கவுள்ளார்.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்துடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளார். (எ-இ)

## 5 மாதங்களில் 1,003 வீதிவிபத்துகள் 1,062 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே 28

இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 1,003 வீதிவிபத்துகள் பதிவாகியுள்ளதுடன் 1,062 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். இதனிடையே 2,064 படுகாயங்களைஏற்படுத்தியவிபத்துகள்நிகழ்ந்துள்ளதுடன் இதில் சுமார் 7,000 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்துவோரின் எண்ணிக்கை கடந்த வருடத்தைவிட இந்த வருடம் 3 மடங்காக அதிகரித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



# ஆயுதப்படைகளின் தியாகம் மெச்சப்படவேண்டுமாம்!

## முன்னாள் கடற்படைத்தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 28

ஒற்றையாட்சியைப் பாதுகாக்க ஆயுதப்படைகள் செய்த மகத்தான தியாகங்களை அரசியற்கட்சிகள் கவனத்திற்கொள்ளவேண்டும் என ஓய்வு பெற்ற கடற்படைத்தளபதி தசநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தின்போது பிரபாகரன் உள்ளிட்ட தளபதிகள் முல்லைத்தீவினூடாக வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்றபோது அவர்களை வெளியேறவிடாமல் தடுத்து நிறுத்தியவர்களில் நானும் ஒருவன். ஆனால் நாட்டுக்குச் சேவை செய்ததற்காக தண்டிக்கப்பட்டவர்களில் நானும் உள்ளேன். யுத்தம் நடைபெற்ற வேளையில் 11 தமிழ் இளைஞர்கள் காணாமலாக்கப்பட்ட குற்றச்சாட்டில் ஜூலை 2017 இல் கைதுசெய்யப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி வரை சிறையில் அடைக்கப்பட்டேன்.

போரை வெற்றிகரமாக நடத்திய ஆயுதப்படையினர் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உளவியல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படு கின்றனர்.

2009 மே மாதம் போர் வெற்றிகரமாக முடிவடைந்ததிலிருந்து பரப்பப்பட்ட ஆதாரமற்ற போர்க் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள எந்த அரசாங்கமும் உண்மையான முயற்சியை எடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-6)

# சர்வதேச குத்துச்சண்டை சுற்றுப்போட்டி இலங்கையில்

கொழும்பு, மே 28

அடுத்தாண்டு நடைபெறவுள்ள சர்வதேச குத்துச்சண்டை சுற்றுப்போட்டியை இலங்கையில் நடத்துவதற்கு சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்னமும் எடுக்கப்படாவிட்டாலும், இந்தச் சுற்றுப்போட்டியை இலங்கையில் நடத்துவதற்கு குத்துச்சண்டை சம்மேளனம் ஆர்வமாக உள்ளது.

அண்மையில் ஆசிய குத்துச்சண்டை சம்மேளனத் தலைவர், சர்வதேச குத்துச்சண்டை சம்மேளன தலைவர், இலங்கை குத்துச்சண்டை சம்மேளனத் தலைவர் ஆகியோருக்கிடையே கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஆசிய இளைஞர் குத்துச்சண்டை சுற்றுப்போட்டிக்கு இலங்கை வழங்கிய ஆதரவைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ஏ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை இல்லாதவகையில் டெங்கு, சிக்கன்குனியா பரவல்

கொழும்பு, மே 28

**நாட்டில் தற்போது சிக்கன்குனியா மற்றும் டெங்குத்தொற்று என்பன அதிகரித்துள்ள நிலையில் அரசாங்கம் விரிவான நுளம்புக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.**

இந்த நடவடிக்கையில் நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யக்கூடிய இடங்களைக்கொண்ட 31 ஆயிரத்து 145 வளாகங்கள் அடையாளம் காணப்பட்டன என்றும், நுளம்புக் குடம்பிகளுடன் 6 ஆயிரத்து 77 வளாகங்கள் காணப்பட்டுள்ளன என்றும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார மற்றும் ஊடக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், 3 ஆயிரத்து 916 சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும், ஆயிரத்து 470 வளாகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பி டப்பட்டுள்ளது. வீடு மற்றும் அலுவலகத்தைச் சுற்றியுள்ள சூழலை நுளம்புகள் இல்லாமல் வைத்திருக்க வேண்டும்.

வாரத்துக்கு ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு மணி நேரமாவது ஒதுக்கி, தங்கள் வீடுகள், அலுவலக வளாகங்களை சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். (எ-இ)

வடக்கு சுற்றுலாத்துறை

## மேம்பாட்டு முன்மொழிவுகள் ஜனாதிபதியிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 28

எதிர்காலத்தில் வடக்குமாகாண சுற்றுலாத்துறை வளர்ச்சியை மேம்படுத்துவதற்குரிய முன்மொழிவுகள், வடக்குக்கான கைத்தொழில் துறைகளின் மன்றத்தால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் நடந்த சுற்றுலாத்துறைசார் கண்காட்சியில் வைத்து இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத்தலங்கள், புராதன சின்னங்கள், சுற்றுலா விடுதிகள், சுற்றுலாப்பயண ஏற்பாட்டாளர்கள், இயற்கைக்காட்சிகள், கலை கலாசார அம்சங்கள், வடமாகாணத்தின் பாரம்பரிய உணவுகள், பொழுதுபோக்கு மையங்கள் போன்ற பல்வேறு அம்சங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டதுடன் நேரடி விளக்கங்களும் அளிக்கப்பட்டன. (ச-213,60)

## பொலிஸ் ரோந்து யாழில் தீவிரம்!

யாழ்ப்பாணம், மே 28

யாழ்.நகரை அண்டிய முற்றவெளி மற்றும் கோட்டைச் சுற்றாடல் பகுதிகளை பொலிஸார் இரவுவேளைகளில் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் இரவு வேளைகளில் சந்தேகத்துக்கிடமாக நடமாடுவோர் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். சட்டவிரோதமான போதைப்பொருள் விற்பனை, மது அருந்துதல் மற்றும் சீரற்ற கலாசார நடவடிக்கைகள் உள்ளிட்ட குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸாரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-41-17)

## சட்டவிரோத மீன்பிடி 36 பேர் கைது!

கொழும்பு, மே 28

கடற்படையினரால் கடந்த மே 10 முதல் 19 வரையான காலப்பகுதியில் இலங்கைக் கடலில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் பல்வேறு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட36 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொடுவாமடை, சல்லிக்கோவில், ஏறக்கண்டி, ஆனையிறவு, நந்திக்கடல், கல்லடி, பருத்தித்துறை, அளம்பில் ஆகிய கடற்பரப்புகளில் இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றது. இதன்போது 117 தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள், 9 டிங்கிகள், 3808 சட்டவிரோதமாக பிடிபட்ட கடல் அட்டைகள் மற்றும் மீன்பிடிக்கப் பயன்படுத்திய இலகுரக கருவிகள் கைப்பற்றப்பட்டன. (ச- 213)



அரச சேவையில்

## 15,073 வெற்றிடங்களுக்கு விரைவில் ஆட்சேர்ப்பு

கொழும்பு, மே 28

அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி 18 நிரல் அமைச்சுகள், 4 மாகாணசபைகள் மற்றும் 2 விசேட செலவு அலகுகளில் நிலவும் 15,073 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளது. (ச-இ)

## சட்டவிரோத எல்லைதாண்டல் இலங்கையர் மூவர் கைது

கொழும்பு, மே 28

இத்தாலிக் குடியிருப்பு அனுமதிகளுடன் அல்பேனியா வடக்கு மாசிடோனியா எல்லையைக் கடக்க முயன்ற 3 இலங்கையர்களை அந்நாட்டு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகத்துக்குரிய போலி ஆவணங்களுடன் எல்லையைக் கடக்க முயன்றபோது அவர்கள் கோர்சாவில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 57,51 மற்றும் 36 வயதான மூவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து மீட்கப்பட்ட பொருள்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




**பயந்தவன் கண்ணுக்கு பாய்ஞ்சதெல்லாம் பேயாம். இப்பிடி ஆக்களைப்பயப்பிடுத்தி அதைவைச்சு உழைக்கிற ஆக்களும் இஞ்ச இருக்கத்தான் செய்யினம். 'ஓடிபி' நம்பரை வாங்கி, ஆக்களின்ர வங்கிக்கணக்கில இருக்கிற காசையே வழிச்சுத் துடைக்கிற நவீன கள்ளர்கள் ஒருபக்கம் உழைக்க, பழையகால பில்லி, சூனியப் பித்தலாட்டங்களை வைச்சு உழைக்கிற ஆக்களின்ர காட்டிலையும் எப்பவும் மழைதான். புது ரெக்னிக்கோ இல்லாட்டி பழைய ரெக்னிக்கோ எதெண்டாலும் ஏமாத்திற வைக்குத்தான் இப்ப காலம்.**

**இப்பிடி ஏமாத்திறவை ஒரு இடத்தில மட்டும் தங்கட வேலையளைக் காட்டமாட்டினம், அடிக்கடி தங்கட விளையாட்டுக் காட்டுற இடங்களை மாத்திக்கொண்டிருப்பினம். கொஞ்சநாளைக்கு முந்தி யாழ்ப்பாணம் ரவுணில இருக்கிற கடையளில வெந்த பருப்பை, இப்ப பருத்தித்துறைப் பக்கமும் அவிக்கலாமெண்டு ஒரு கும்பல் வெளிக்கிட்டிருக்குது. அங்க நல்ல பிஸ்னஸ் நடக்கிற கடைமுதலாளிக்கு புதுநம்பரில இருந்து கோலொண்டு வரும். 'நான் சோதிட சிகாமணி ( உண்மையான பேரை மாத்தியிருக்கிறம்) கதைக்கிறன். உங்களோட ஒரு அவசர அலுவல் கதைக்கோணும்' எண்டு பவ்வியமா ஒராள் கதைப்பார். ஆனால் பிஸ்னஸ் நடக்கிற நேரத்தில ஆர்தான் இப்பிடி முன்னப்பின்ன தெரியாத ஆளோட போனில அலம்பிக்கொண்டிருப்பினம்? அதால 'இப்ப நேரமில்லை பிறகு எடுங்கோ' எண்டு கட் பண்ணவெளிக்கிட்டால், 'அவசரப்பட்டு கட் பண்ணாதையுங்கோ, இது உங்கட உயிரும், தொழிலும் சம்பந்தப்பட்ட விசயம்' எண்டு ஒரு பொறியைப் போன் எடுத்தவர் விரிப்பார். அதில சிக்குப்படுற ஆக்கள்தான் கூட. 'என்ன ? உயிர் விசயமோ?' எண்டு கொஞ்சம் பயத்தோட கேட்டினமெண்டால் கதை கந்தலாகிடும்.**

**'ஓம் ஐயா, உங்கட மனுசியின்ர உடுப்பு, உங்கட காலடி மண் எண்டு சில சாமான்களோட ஒரு பகுதி என்னட்ட வந்து உங்கட தொழிலும் குடும்பமும் நாசமாப் போகோனும் எண்டு செய்வினை செய்யச் சொல்லிக் கேட்டவை. நான் உந்த எளிய வேலையள் செய்யமாட்டனெண்டு பேசிக் கலைச்சுப்போட்டன். ஆனால் இன்னொரு ஆளிட்டப் போய் செய்வினையை வைச்சிட்டினம். அதைச் சொல்லத்தான் கோல் எடுத்தன்' எண்டு அவரில கடும் அக்கறையுள்ள ஆள்மாதிரி அவர் கதைப்பார். 'அந்தச் செய்வினையை எடுக்க ஏலாதோ?' எண்டு கடைக்காரர் கேட்டால், கோல் எடுத்தவர் ஒரு வழியைச் சொல்லிப்போட்டு ' இப்பிடி செய்வினயை எடுக்க வேணுமெண்டால் ரண்டு லட்சத்துக்கு கிட்டத் தேவை' எண்டு சொல்லுவார். செய்வினை சூனியங்களில நம்பிக்கைஉள்ள சிலர் இப்பிடிக்காசைக் குடுத்து ஏமாந்திருக்கினம். சிலருக்கு உப்பிடியான மூட நம்பிக்கையில நம்பிக்கை இல்லாட்டியும், 'ஒருவேளை உண்மையா இருக்குமோ?' எண்டு யோசிச்சு யோசிச்சே குழம்பினவையும் இருக்கினம். இப்பிடி காசு குடுத்து ஏமாந்த கடைக்காரர் சிலர் பிறகு ஆளுக்காள் இந்த விசயத்தைச் சொல்லேக்கதான் தாங்கள் மட்டுமில்ல இப்பிடி இன்னும் கொஞ்சப்பேரும் ஏமாந்திருக்கினம் எண்டது அவைக்குத் தெரியவந்திருக்காம். தங்களைச் செய்வினை, சூனியம் எண்டு ஏமாத்தினவரைப்பற்றி கடைக்காரர் பொலிஸிலையும் முறைப்பாடு குடுத்திருக்கினம். வினை விதைச்சவன் வினை அறுக்கத்தானே வேணும். செய்வினை வைச்சதாக் கதைவிட்டவரும் மாட்டத்தானே வேணும்?**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அம்பலவாணர் லோக நாதனின் மணிவிழா, சரஸ்வதி கலையரங்கத்தில் இன்று புதன் கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி இராசையா லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கல்லூரிச் சமூகம் அழைப்புவிடுத்துள்ளது. (ச-33)


## பணிப்பெண் உடன் தேவை

யாழ் நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளராக பணிப்பெண் ஒருவர் தேவை (யாழ்நகரை அண்டியபகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொ.இல :- 076 231 8693


## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு **வீ.இரத்தினகாந்தன்** அவர்களின் அன்புத் தாயாகிய

**அமரர் வீரசிங்கம் சசீந்திராதேவி**

அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

தோற்றம் 08 -06 -1943 மறைவு 27 -05-2025

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவு சங்கம்




# 'பியாஜியோ' ஓட்டோ இறக்குமதி

கொழும்பு, மே 28

சிங்கர் நிறுவனம் பியாஜியோ முச்சக்கரவண்டி களை இறக்குமதி செய்து வருகிறது.

பியாஜியோ முச்சக்கர வண்டிகளின் அறிமுக நிகழ்வு கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது பத்து முச்சக்கர வண்டிகள் விநியோகிக்கப்பட்டன. (ச- 25, 6)

# INVITATION FOR BIDS
# MARITIMEPATTU - PRADESHIYA SABHA

1. The Chairman, Local Authority Procurement Committee and The Chairman, Divisional Procurement Committee on behalf of the Secretary, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 28.05.2025 until 10.06.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 04.06.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 11.06.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | PSDG/NP/MU/MPPS/2025/OS/01 | Improvement Of Mullaitivu Children Park & Sinnaaru Park Marritimepattu PS | PSDG | 2.54 Mn | 49 Days | C9or Above (Building) | 3000.00 | 29/July /2025 | 39,000.00 | 26/Aug/ 2025 |
| 02 | PSDG/NP/MU/MPPS/2025/OS/02 | Improvement Works Of Mullaitivu Beach | PSDG | 2.20 Mn | 49 Days | C9or Above (Building) | 3000.00 | 29/July /2025 | 34,000.00 | 26/Aug/ 2025 |
| 03 | PSDG/NP/MU/MPPS/2025/CWS/01 | Renovation Of Vehicle Shed For Water Bowser At Maritimepattu PS | PSDG | 2.20 Mn | 49 Days | C9or Above (Building) | 3000.00 | 29/July /2025 | 34,000.00 | 26/Aug/ 2025 |
| 04 | NP/14/44(01)/02/03 /DE.RE/CAPITAL/ 2025/09 | Construction Of Front Landscaping Works For The Local Product Sales Center At Mullaitivu Town | Council | 1.69 Mn | 49 Days | C9or Above (Highway) | 1000.00 | 29/July /2025 | 26,000.00 | 26/Aug/ 2025 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Maritimepattu - Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu (T.P:0212290001, email: pskpattu@gmail.com)from 9:00 hrs to 15:00 hrs during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) S/No from 01 to 03 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu and Bids (Original & Duplicate) S/No from 04 must be delivered to the Chairman, Local Authority Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu on or before 10.30 A.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Local Authority Procurement Committee & Divisional Procurement Committee,
Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu. 28.05.2025

(CR/45207) J-1



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். முக்கியப் பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்கள் வீட்டுவிருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்

**கடகம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டா[illegible]. பிற்பகலுக்கு மேல் பயணம் மேற்கொள்வதைத் [illegible]ர்க்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பி னர்களை அனுசரித்துச் செல்லவும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும். எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவுசெய்வீர்கள்.

**தனுசு:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும், எளிதாகச் செய்து அதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளநேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணை வழி உறவுகள் உதவிகேட்டு வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

பணம் அடித்தளம் தெரியாத ஒரு கடல். அந்தக் கடலில் கௌரவம், மனச்சாட்சி, உண்மை ஆகியவையெல்லாம் மூழ்கிவிடுகின்றன.
– சாமர்செட்மகம் –

# கண்காணிப்பின் வெற்றி கடற்படையின் கையில்!

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள், போதைப் பொருள் கடத்தல்கள் என்பவற்றைத் தடுக்கும் நோக்குடன் இலங்கைக் கடற்பரப்பில் அதியுச்ச கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. கடற்றொழில் அமைச்சுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலான கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த நடவடிக்கை எப்போதோ செயற்படுத்தப்பட்டிருக்கவேண்டிய ஒன்று. இப்போதாவது இது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதேநேரம், வெறும் பேச்சுடன் நின்றுவிடாது இதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியதும் அவசியமானது.

இலங்கைக்குள் போதைப்பொருள்கள் கடல் மார்க்கமாகவே அதிகம் கொண்டுவரப்படுகின்றன. கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்படும் போதைப் பொருள்கள் கடந்த காலங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கைப்பற்றப்பட்டாலும், கடல் வழியான போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு 'பிரதானமாக கடற்படை' தோல்வியடைந்திருந்தது. நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலான போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கு கடற்படை முழுமனதுடன் செயற்படவில்லை என்றே கூறலாம். இலங்கைக் கடற்பரப்பைக் கண்காணித்து சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுக்கவேண்டிய கடற்படையின் அசமந்தப் போக்கு, நாட்டுக்குள் போதைப்பொருள் வியாபாரம் கொடிகட்டிப் பறப்பதற்கு ஒரு பிரதான காரணம். அதேபோன்று, இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நடக்கும் மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டியதும் கடற்படையினரின் கைகளிலேயே இருக்கின்றது. ஆனால் கடற்படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, இன்றுவரை அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அத்துமீறிய மீன்பிடியால் வடக்கு மீனவர்களே பெரிதும் பாதிக்கப்படும் நிலையில், நாட்டின் வடக்குக் கடலைக்கூட கண்காணித்து அத்துமீறும் தமிழக மீனவர்களைத் தடுக்கமுடியாத வக்கற்றநிலையில்தான் இலங்கையின் கடற்படை இருக்கின்றது.

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள், போதைப் பொருள் கடத்தல்கள் என்பவற்றைத் தடுக்கும் நோக்குடன் இலங்கைக் கடற்பரப்பில் அதியுச்சக் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தாலும், அதைச் செயற்படுத்தவேண்டிய பொறுப்பு கடற்படையிடமே இருக்கின்றது. கண்காணிப்பு நடவடிக்கைகளைக் கடற்படையினர் முறையாகச் செயற்படுத்தினால் மட்டுமே அரசாங்கம் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும். இப்போதிருப்பதைப் போல, அணிலேற விட்டுவிட்டு அண்ணாந்து பார்த்து கடற்படை குறட்டை விட்டுக்கொண்டிருந்தால், போதை மாபியாக்களுக்கும், அத்துமீறும் மீனவர்களுக்கும் இலங்கைக் கடற்பரப்பு தொடர்ந்தும் சொர்க்கபுரியாகவே இருக்கும். எனவே வெறும் தீர்மானங்கள் என்ற வாய்ப்பந்தலோடு நின்றுவிடாமல், கடற்கண்காணிப்பை முழுமையாகவும்,வினைத்திறனோடும் மேற்கொள்ள கடற்படை ஒத்துழைக்க வேண்டும். இல்லையேல் இந்தத் தீர்மானமும் பத்தோடு பதின்னொன்றாக, நீர்த்துப் போய்விடும்.



## மருத்துவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு
# அரசுக்கு ஒருவாரமே அவகாசம்
### மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை


**கொழும்பு, மே 28**
**மருத்துவர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு, லீவு நாள்களில் கடமையாற்றுவதற்கான கொடுப்பனவு போன்ற பிரச்சினைகளுக்கு ஒருவாரத்தினுள் தீர்வு காணப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உயர்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கப் பேச்சாளர் சமில விஜேசிறி நடத்திய ஊடக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எமது முன்னைய கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்தார். மார்ச் மாதம்25 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் எமது கோரிக்கைகள் உள்வாங்கப்பட்டிருந்தன.
எனினும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே எமது பிரச்சினைகளுக்கு ஒரு வாரத்தினுள் தீர்வு காணப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிப்போம் என்றும் சங்க பேச்சாளர் சமில விஜேசிறி மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)




## உயர்தரப் பரீட்சை மீள்பரிசீலனை
### விண்ணப்பகாலம் நீடிப்பு

கொழும்பு, மே 28
2024 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளை மீள்பரிசீலனை செய்வதற்கு விண்ணப்பிக்க முடியாதவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு, பரீட்சைத் திணைக்களம் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்கும் காலத்தை நீடிக்க முடிவு செய்துள்ளது.
அதன்படி, குறித்த விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை இணையவழியில் சமர்ப்பிக்கமுடியும் எனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான https://www.doenets.lk க்கு பிரவேசித்து, Our Services பகுதியின் கீழ் உள்ள "Exam Information Centre" என்பதை கிளிக் செய்து விண்ணபிக்கலாம். அத்துடன் https://onlineexams.gov.lk/eic இணையத்தளத்தை அணுகுவதன் மூலமும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## சுற்றுலாவிகள் வருகை
### ஒரு மில்லியனைக் கடந்தது

கொழும்பு, மே 28
இலங்கைக்கு வந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை இந்த வருடத்தின் மே மாதம் 25 ஆம் திகதி வரை ஒரு மில்லியனைக் கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. ஜனவரி முதலாம் திகதி முதல் மே 25 ஆம் திகதி வரை மொத்தம் ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 97 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இந்த ஆண்டு மே மாதத்தில் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து 7,661பேரும், சீனாவில் இருந்து 7,139 பேரும், ஜேர்மனியில் இருந்து 6,143 பேரும், பங்களாதேஷில் இருந்து 5,637 பேரும், அவுஸ்திரேலியாவில் இருந்து 4,917 பேரும், பிரான்ஸில் இருந்து 4,660 பேரும், அமெரிக்காவில் இருந்து 2,959 பேரும், ரஷ்யாவில் இருந்து 2,950 பேரும், கனடாவில் இருந்து 2,783 பேரும் வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இரவு உல்லாசம் கருத்திட்டத்துக்கு அனுமதி

இரவுப்பொழுதில் உல்லாச செயற்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வெளிவிவகார,வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

## கடல்கொந்தளிப்பு; சிவப்பு எச்சரிக்கை

அம்பாறை, மே 28
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசுவதுடன், கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. சிலாபம் முதல் காங்கேசன்துறை ஊடாக புத்தளம் வரையிலும், காலி முதல் ஹம்பாந்தோட்டை வரையிலுமான கடற்கரையோரப் பகுதிகளுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த சிவப்பு எச்சரிக்கை இன்று வரை நடைமுறையில் இருக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
வியாழக்கிழமை- வைகாசி 15
29.05.2025
சுபநேரம் : 07.22- 08.52
ராகுகாலம் : 01.22 - 02.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடரின்23ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் சிறப்புச்சொற்பொழிவினை இளஞ் சைவப்புலவர், பிரசங்கச்சுடர் த. மனோஜ்குமார் "வழிநடைப்படலம்" எனும் விடயப்பொருளில் ஆற்றுவார். (ச-41)

# உலக வங்கிக் குழுவினர் யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாண மாவட்டத்தின் சுற்றுலாத்துறை, கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் உலக வங்கிக் குழுவினர், யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

உலக வங்கியின் இலங்கை நாட்டுக்கான செயற்பாட்டு முகாமையாளர் அபிட் கலி செயற்றிட்டத் தலைவர் காயத்திரி சிங் மற்றும் உலக வங்கியின் ஏனைய பிரதிநிதிகள் உள்ளிட்ட ஆறு பேர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

கலந்துரையாடலில் மாவட்டத்தின் விவசாயம், மீன்பிடி அபிவிருத்திக்கான தேவைகள், அச்சுவேலி மற்றும் காங்கேசன்துறை கைத்தொழில் வலயத்திற்கான புதிய முதலீடுகள், யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் யாழ்ப்பாண பழைய கச்சேரி போன்றவற்றை மரபுசார் சுற்றுலா நோக்கில் விருத்திசெய்தல், சரசாலை மற்றும் மண்டைதீவு சிறுதீவுப் பகுதிகளை சூழல்சார் சுற்றுலா மையங்களாக மாற்றுதல், நெடுந்தீவினை சுற்றுலா நோக்கில் முழுமையான அபிவிருத்தி கொண்ட தீவாக மாற்றுதல் போன்ற விடயங்களுடன், யாழ். மாவட்டத்தில் பிரதேச ரீதியாக டிஜிற்றல் அடிப்படையிலான வானிலை அவதானிப்பு நிலையங்களை நிறுவுதல் போன்றவற்றுக்கான நிதித் தேவைப்பாடு குறித்து மாவட்டப் பதில் செயலாளரால், எடுத்துக்கூறப்பட்டது.



மேலும், மீன்பிடி படகுத்தள அபிவிருத்தி, போதைவஸ்து பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாகாண ரீதியான புனர்வாழ்வு நிலையம், உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாகாண ரீதியான காப்பகம், மற்றும் யாழ். நகர அபிவிருத்தி, வெள்ள வடிகாலமைப்பு அபிவிருத்தி, கழிவுநீர் சுத்திகரிக்கும் செயற்றிட்டம், கழிவகற்றல் முகாமைத்துவம் போன்ற விடயங்களுக்கான அவசியப்பாடு என்பன குறித்தும் உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டப்பட்டது. (ச-33-27-125)


## வேலை வாய்ப்பு - தலைமைச் சாரதி

HALO TRUST நிறுவனம தலைமை சாரதி பதவிக்கு அர்ப்பணிப்புள்ள மற்றும் கவனமுள்ள நபர்களைத்தேடுகிறது.

வேலைத்தலைப்பு :- தலைமை சாரதி
இடம் :- கிளிநொச்சி
வேலை வகை :- ஒப்பந்தம்
விண்ணப்ப முடிவுத் திகதி :- 02 ஜீன் 2025

**பணியின் விபரம்:**

எங்கள் போக்குவரத்து அணியில் சேர அர்ப்பணிப்புள்ள மற்றும் விபரங்கள் தெரிந்த தலைமை சாரதியை நாம் தேடுகின்றோம். தலைமை சாரதிகளின் அமைப்பின் வாகனக்குழுவை திறம்பட இயக்குவதில். சாரதிகளின் குழுவை மேற்பார்வையிடுவதினை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றார். இந்த பதவி நிர்வாகம் மற்றும் நேரடிப் பணிகளுடன் சேர்ந்து பாதுகாப்பு. ஒருங்கிணைப்பு மற்றும் ஹலோ கொள்கைகளுக்கு இணங்குவதை வலியுறுத்துகிறது.

**முக்கிய பொறுப்புக்கள்:**

- தேவைக்கேற்ப தினசரி சாரதிகளின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதலுடன் செயல்படுகளை வழுங்குதல் வேண்டும்.
- பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் நிர்வாகக் கொள்கைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல்.
- வாகன பராமரிப்பு அட்டவணையை கண்காணிக்கவும் மற்றும் சிக்கல்களை உடனடியாக சரிசெய்தல் வேண்டும்.
- போக்குவரத்து தேவைகளுக்காக பிறதுறைகளுடன் ஒருங்கிணைத்தல்.
  குழு உறுப்பினர்களின் திறன்களையும் செயல்திறன்களையும் மேம்படுத்த பயற்ச்சி அளித்தலுடன் வழிகாட்டுதல்.
- சாரதிகளின் வருகையை தினமும் சரிபார்த்தல்.
- சாரதிகளால் தினமும் மேற்க்கொள்ளப்படும் வாகன சோதனைகளை மேற்பார்வையிட்டு அதில் ஏதேனும் பழுதுகள். பிழைகள் இருப்பின் அதனை சம்மந்தப்பட்ட துறைகளுக்கு தெரிவிப்பதோடு உறுதி செய்தல் வேண்டும்.
- கண்ணிவெடி அகற்றும் பணியில் உள்ள சாரதிகளின் பணிகளை திட்டமிடுவதும் அதனை கண்கணிப்பதும்.
- வாகன பழுதுபார்ப் பு குறித்த தகவல்களை பணிமனைக்கு அறிவித்தல்.
- வாகன ஆவணங்களை சரி பார்த்து. அதனை குழு நிர்வாகியிடம் அறியப்படுத்துதல்.
- விபத்துக்கள் மற்றும் சம்பவங்களை சரியாக விசாரித்து வாகனக் குழு நிர்வாகியிடம் மேல் நடவடிக்கைகளுக்காக அறியக்கொடுப்பதோடு உறுதி செய்தல் வேண்டும்.
- சாரதிகள் சார்பாக காவல் துறையினருடன் தொடர்புகொள்ளுதல்.
- செயற்பாட்டு மேலாண்மை/ வெளிநாட்டவர்களினால் விதிக்கப்படும் அபதாரங்களை பதிவு செய்வதுடன் அதனைப் பேற்று தேவைப்படும் பொழுது அபதாரம் பெற்றதை உறுதி செய்தல்.
- வேலை நிறுத்தத்தின் போது எல்லா வாகனங்களும் சுத்தம் செய்யப்பட்டு அத்துடன் எரிபொருள் நிரப்பப்பட்டு. தயார் நிலையில் இருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
- தேவைப்படும் பொழுது தற்காலிக சாரதியாக பணிபுரிதல் வேண்டும்.
- வேறு ஏதாவது பணிகளை செய்து தரும் படி உங்கள் மேலாளர் அல்ல நிர்வாகத்தினால் கோரினால் செய்வதற்கு தயாரா இருக்க வேண்டும்.

**தகுதிகளும் மற்றும் திறன்களும்:**

- செல்லுபடியாகும் மற்றும் இன்று வரை நீடிக்கின்ற ஒரு நல்ல சாரதி உரிமைத்தினை கொண்டிருத்தலுடன். பிரச்சனைகள் இன்றி நல்ல பதிவுகளில் இருத்தல் வேண்டும்.
- குறைந்தது 05 வருட சாரதி அனுபவம் இருத்தல் வேண்டும். வலுவானத் தலைமைத்துவம். தகவல் தொடர்பு மற்றும் நிறுவனத்திக்கான திறன்கள்.
- வாகன பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தர நிலைகள் பற்றிய நல்ல அறிவு.
- எல்லாக்குழுக்களுடனும் சேர் ந்து கடமைகளை செய்யும் திறன்.
- S.L.A, போலீஸ் மற்றும் R M V க்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால். சிங்கள மொழி நன்றாக தெரிந்திருத்தல் வேண்டும்.

**எங்களால் வழுங்கப்படும் சலுகை:**

- ஒத்துழைப்பு மற்றும் ஆதரவான பணிச் சூழல்.
- தொழில் முறைகளை மேம்படுத்தவும் மற்றும் வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்கள்.
- போட்டித்தன்மை வாய்ந்த சம்பளமும் அத்துடன் கிடைக்கும் சலுகைகளும்.

**விண்ணப்பிப்பது எப்படி:**

விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் CV மற்றும் மடற்குறிப்புகளை "(Head Driver பதவிக்கு விண்ணப்பம்)" எனும் தலைப்புடன் hr@halosrilanka.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 02 ஜீன் 2025க்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும். கீழே உள்ள முகவரிக்கு உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவும்:

**மனிதவள மேலாளர்**
**தி ஹேலோ டிரஸ்ட்**
**450 திருநகர் மேற்குப் பகுதி**
**கிளிநொச்சி**
**தொடர்பு: 021 228 5466.** **மின்னஞ்சல்: hr@halosrilanka.org**

(R/4/205) J-1



## மாந்தை மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) திருக்கேதீஸ்வரம்
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

மாந்தை மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதி (28) இதற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழு தேர்விற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டம் 31.05.2025 திகதி நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. இதற்கமைய இக்கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்மந்தப்பட்ட அலுவலர் களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும். தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக் குழுவிற்கென ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும் படி பொதுச்சபையை கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள்
3. பெருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார். இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவிளச் சீட்டின் மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்
4. தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்களை கிளைபொதுச்சபையில் பிரகடனப் படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்

இல கிளையின் பெயர் கிளை பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம்

| இல | கிளையின் பெயர் | காலம் | நேரம் | கிளை பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | திருக்கேதீஸ்வரம் 01 | 31.05.2025 | பி.ப 02.00 | தலைமைச் செயலகம் திருக்கேதீஸ்வரம் |
| 02 | பெரிய நாவற்குளம் 03 | 31.05.2025 | மு.ப.10.00 | தலைமைச் செயலகம் திருக்கேதீஸ்வரம் |
| 03 | கண்டல் 2A | 31.05.2025 | மு.ப.10.00 | பாப்பாமோட்டை றோ.க.த.க.பாடசாலை |
| 04 | விடத்தல் தீவு 7A | 31.05.2025 | மு.ப.10.00 | மன் அலிகார்.அ.மு.க.பாடசாலை |
| 05 | விடத்தல் தீவு 7B | 31.05.2025 | மு.ப.10.00 | மன் தூய யோசவ்வாஸ் மகா வித்தியாலயம் |
| 06 | பெரியமடு 9A | 31.05.2025 | மு.ப.10.00 | பெரியமடு மேற்கு பொதுநோக்கு மண்டபம் |
| 07 | பெரியமடு 9B | 31.05.2025 | மு.ப.10.00 | பெரியமடு கிழக்கு பொதுநோக்கு மண்டபம் |
| 08 | ஈச்சளவக்கை 9C | 31.05.2025 | மு.ப.10.00 | மன் ஈச்சளவக்கை அ.த.க.பாடசாலை |
| 09 | கோவிற்குளம் 06 | 31.05.2025 | மு.ப.10.00 | மன் கோவில் குளம் அ.த.க.பாடசாலை |
| 10 | இலுப்பைக்கடவை 5A | 31.05.2025 | மு.ப.10.00 | மன் இலுப்பைக்கடவை த.ம.வித்தியாலயம் |
| 11 | மூன்றாம் பிட்டி 4C | 31.05.2025 | மு.ப.10.00 | மன் மூன்றாம்பிட்டி அ.த.க.பாடசாலை |
| 12 | வெள்ளாங்குளம் 4A | 31.05.2025 | மு.ப.10.00 | மன் வெள்ளாங்குளம் அ.த.க.பாடசாலை |

**இந்த பொது அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளவும்.**

**செயலாளர்**
**மாந்தை மேற்கு ப.நோ.கூ.சங்கம்**
**திருக்கேதீஸ்வரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 5 ஆண்டுகளில் 'என்கவுண்டரில்' 79 பேர் பலி!

கொழும்பு, மே 28

கடந்த ஐந்து வருடங்களுக்குள் "என்கவுண்டர்" முறையில் இலங்கையில் 79 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்றும், இவ்வாறு கொல்லப்பட்ட சந்தேக நபர்கள் பொலிஸ் பிடியாணையில் அல்லது கண்காணிப்பில் இருந்தவர்கள் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 4 மாதங்களில் 28 சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 2023ஆம் ஆண்டு 546 சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இந்த ஆண்டு மார்ச் 15ஆம் திகதிவரை 8 ஆயிரத்து 95 மனித உரிமை மீறல் முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளன என்று ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் எல்.ரீ.பி. தெஹிதெனிய தெரிவித்துள்ளார். அந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



படம் - ஐ.சிவசாந்தன்

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தினமாகிய கடந்த சனிக்கிழமை காலை சகஸ்ரசங்காபிஷேகமானது ஆலயத்தில் விஷேட அபிஷேக பூசைகளாக இடம்பெற்றது. மாலை 4.30மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் சண்முகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக தண்டிகையில் வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெற்றது. (ச-41)


## கேள்வி அறிவித்தல் - 2025
## யாழ் மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் கடைகளுக்கான

இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 28.05.2025 தொடக்கம் 11.06.2025 வரை யாழ்ப்பாணத்தில் உள்ள எமது சமாசத்தின் கீழ் காணப்படும் கடைகளை வாடகைக்கு விடுவதற்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்.

- **கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி** :- 28.05.2025 – 11.06.2025
- **கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி** :- 11.06.2025 பி.ப 2.00 மணி வரை
- **கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி** :- 13.06.2025 மு.ப 10.00 மணி
- **கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம்** :- கிராமிய வங்கிகளின் சமாச அலுவலகம்

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு "தலைவர்,பெறுகைக்குழு யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல 95, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.அல்லது அதற்காக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னதாக இடப்படல் வேண்டும்.

- **மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். தேசிய அடையாள அட்டை, அதன் பிரதி, மற்றும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச்சான்றிதழ் என்பவற்றுடன் விண்ணப்பதாரி நேரடியாக சமூகமளிக்க வேண்டும்.**
- **ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது. என்பதுடன் கேள்விக்தாரரின் பெயர் "தவறுனர்" பட்டியலில் சேர்க்கப்படும்.**
- **கேள்வி நிபந்தனைகள்,அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோஃநிராகரிக்கவோ இயக்குனர் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.**
- **தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் சித்தி பெற்ற கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சமாசத்துடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.**
- **கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமூகமளிக்கலாம்.**
- **கேள்விதாரர் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.**
- **கேள்வி சித்தி பெறாத கேள்விதாரர்களின் கேள்வி வைப்புபணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.**
- **மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.**
- **வருடாந்தம் வாடகையானது 5% அதிகரிப்புக்கு உட்படுத்தப்படும்.**

மூன்று ஆண்டுகளுக்கான கடை வாடகை அட்டவணை

| தொ.இல | விபரம் | முற்பணம்- நிலையானது | ஆகக்குறைந்த கேள்வித்தொகை – மாத வாடகை | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல - 02 | 3,000,000.00 | 100,000.00 | 20,000.00 | 3,000.00 |
| 02 | கடை இல - 03 | 3,000,000.00 | 100,000.00 | 20,000.00 | 3,000.00 |

தலைவர்,
யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்,
95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
0212222639

(CR/45202) J-1



படம்- ஐ.சிவசாந்தன்

## நல்லூர்ப் பெருவிழா பட்டோலை கையளிப்பு


நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஜூலை 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலய சம்பிரதாய முறைப்படி பெருவிழா பட்டோலை அடங்கிய காளாஞ்சியை, யாழ். மாநகரசபையினரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. நல்லூர்க்கந்தன் பெருவிழாவுக்கான ஆலயச் சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்தல், வீதித் தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகரசபையினரிடம் ஆலய கணக்குபிள்ளையால் இந்தக் காளாஞ்சி கையளிக்கப்பட்டது. இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகரசபை வளாகத்தில் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரங்கள் அமையப்பெற்றிருந்தன. (ச-25-27-66)



## திருமஞ்சத் திருவிழா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் திருமஞ்சத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்புற, மிகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. (ச-41-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் கதிரமலை சிவன்கோவிலின் வருடாந்தத் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் மத்தியில் மிகச் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. (ச-41-17)

# மின்கட்டணத்திருத்தம்; யாழில் கருத்துக்கோரல்

யாழ்ப்பாணம், மே 28

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான மாற்றுப் பரிந்துரை குறித்து பொதுமக்களிடம் கருத்துக் கோரும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பேராசிரியர் கே.பி.எல் சந்திரலால், பிரதிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலந்த சப்புமானகே, இலங்கை பொதுப்பயன்பாட்டுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க உள்ளிட்ட பிரதானிகள் கலந்துகொண்டனர்.

இதேவேளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமான கலந்துரையாடல் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் இடம்பெறும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிறுவனத் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச- 25, 27)


# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 05 . 1945

மறைவு 26 . 05 . 2025



**நவாலியூர் தம்பிராசா பரமலிங்கம்**
**(நவாலியூர்க் கவிராயர், தேவிபரமலிங்கம், பூமணிமைந்தன், மூலபாரதி, முன்னாள் பத்திரிகை செய்தியாளர்)**

நவாலியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா பரமலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (26.05.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - பூமணி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பெருமாள் - அன்னபூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், தேவி அவர்களின் பாசமிகு கணவரும், கவிதாயினி, கதாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜஸநோவர், தனுசியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரயிற்றஸ், போல், அபியூ, சாதோக், திருசாள், யோனகான், ஆகாஸ், அக்சாள், அஸ்னா, அப்சலோம் ஆகியோரின் அன்பு பேரனும், யரேசியாஏஞ்சலின் அவர்களின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், நாகலிங்கம், கமலம் மற்றும் தேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (29.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் பிரசாத் வீதி, நவாலியில் உள்ள அடைக்கல கூடார சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

17/22A நாவலடி வீதி,
வண் வடமேற்கு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(CS/58399) J-1

தகவல்:
குடும்பத்தினர்



## பணிப் பெண் தேவை

5 பேருக்கு சமையல் செய்வதற்கு மற்றும் வீட்டு வேலை செய்வதற்கு பணிப் பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
077 344 5721

## வேலை வாய்ப்பு

YMCA

யாழ்ப்பாணம் YMCA நிறுவனத்தின் விடுதி மற்றும் வளாகப்பராமரிப்பாளர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு: 077 476 6300, 021 222 2499

## தொடர்மாடி வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் மிகவும் பிரபலமான பாடசாலைகள் மற்றும் super market, வங்கிகள் என்பவற்றிற்கும் காலி வீதிக்கு மிகவும் அருகில் மூன்று படுக்கை அறை கொண்ட புத்தம் புதிய மிகவும் அழகான தொடர்மாடி மனை 1250 மற்றும் 2200 சதுர அடி (sea side) உடன் விற்பனைக்கு உண்டு.(குறித்த வீட்டின் பெறுமதிக்கு ஏற்ப/ புதிய வாகனம் அல்லது சிறிய வீடு/ அல்லது தொடர்மாடி ஒன்றை பண்ட மாற்று செய்ய முடியும். ( தரகர்கள் மாருக்கான கட்டணம் நிபந்தனைக்கு உட்பட்டது)

தொடர்பு :- 0777895760
( முன் பதிவு அவசியம்)

## கட்டடம் வாடகைக்கு தேவை

### மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்

மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் இயங்குவதற்காக யாழ் நகர்ப் பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் வசதிகளுடன் கூடிய கட்டடம் வாடகைக்கு தேவை

- 7000 சதுர அடி தளபரப்பு (ஒருதளம் / இருதளம் )
- 3500 சதுர அடி வாகன தரிப்பிட வசதி
- பிரதான பேருந்து போக்குவரத்து வசதி 500 மீற்றர் தூரத்திற்குள்
- 03 Phase மின் இணைப்பு வசதி
- நீர் மற்றும் 04 மலசலகூட வசதி
- 15" அகலமான நுழைவாயில்

தொடர்புகளுக்கு
மாகாண ஆணையாளர்
சுதேச மருத்துவத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
இல.572/3.ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்
கணக்காளர் :- 0212220824/ 0776218396
நிர்வாக உத்தியோகத்தர் :- 0212220823/ 0770748886

(CR/45093) J-1



# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**சரஸ்வதி தேவராசா**

தோற்றம் 19.05.1944
மறைவு 27.05.2017



திதி - பூர்வபஷ்ச துதியை (28.05.2025)

ஆண்டுகள் எட்டு ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது

**நினைவில் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்**

புதுவீதி (நீதிராஜா வீதி)
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
077 615 3877, 021 222 5499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறந்த மொழியானது பெரும்பாலும் எளிய வார்த்தைகளாலேயே உருவாக்கப்படுகின்றது.

- ஜார்ஜ் எலியட்



பொனிஸ்ரெலா சந்தியாசன்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# முள்ளிவாய்க்கால் கஞ்சி உணவல்ல 'தமிழரின் உணர்வு'

உணவு என்பது மனிதனின் அடிப்படைத்தேவைகளுள் ஒன்று. ஆனால் சில உணவுகள் ஓர் இனத்தின் வரலாற்றையும், துயரத்தையும் எதிர்ப்பையும் பிரதிபலிக்கின்றன. அத்தகையதொன்றே முள்ளிவாய்க்கால் கஞ்சி. இந்தக்கஞ்சியின் மூலம் எம் இனத்தின் பசிக்கான அலறல், மனிதாபிமானத்தை மிதித்தபடி எம்மினத்துக்கு நிகழ்ந்த கொடுமைகள், மனித உரிமை மீறல்கள், அழிவின் ரணம் என்று பல விடயங்கள் குறியீடாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதை வெறும் உணவு என்றோ அல்லது சொந்தங்கள் எல்லாம் கூடிக் குலாவி உண்டு மகிழ்ந்த கூட்டாஞ்சோறு என்றோ நினைத்துவிட முடியாது. மாறாக, ஓர் இனத்தின் இறுதிமூச்சு நின்றுவிடாமலும், பசும் நெல் விளைந்த பூமியில் பட்டினிச்சாவு வராமலும் காத்துக்கொண்டதே முள்ளிவாய்க்கால் கஞ்சியாகும். உப்பில்லாத இந்த அரிசிக் கஞ்சியினால் உயிர்பிழைத்த தலைமுறை நாங்கள்.

இது வெறும் உணவு அல்ல ஓர் உணர்வு. எம் இனத்தின் துயர வரலாற்றின் சாட்சி. 2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டம் முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் பகுதியில் மையங்கொண்டது ஆயிரக்கணக்கான தமிழர்கள் அதில் உயிரிழந்தனர். வரலாறாகவே வாழ்ந்த இனம் வழியேதும் இல்லாமல் தன் இறுதிக் கணங்களுக்குள் புகுந்த பொழுதுகள் அவை. செத்துவிழுந்த உறவுகளை அள்ளி அணைத்து ஒப்பாரிவைக்க நேரமில்லாத அவலநிலை, புதைகுழி வெட்டி அவர்களை விதையாக இட்டு ஒருபிடி மண்ணை அள்ளிப் போட்டுவிட்டு வர முடியாமல் பிணங்களைக் கடந்துவந்த பொழுதுகள் அவை. விடுதலை வேட்கையோடு விடியலுக்காகப் போராடிய எம் தமிழினத்தின் இறுதிக் கணங்கள் அவை. நம் தேசத்தில் குண்டுகள் விழுந்து குழி விழாத இடம் இல்லை. என்றாலும் வாழ்வுக்கான போராட்டம் நீண்டு கொண்டே இருந்தது.

எதிரிகளால் ஏவப்பட்ட குண்டுகள் பலரைப் பலி எடுத்தன. பிஞ்சுகளோ கருகிப்போயினர். பெருவிருட்சங்களோ சரிந்துபோயின. எங்கு பார்த்தாலும் அழுகுரலும் இரத்த ஆறும் ஓயாதிருந்தன. அண்ணாந்து பார்த்தால் கூட ஆகாயத்தில் பிணந்தின்னும் இராட்சசக் கழுகுகள்தான். அரையடி தள்ளிப்படுத்தால் கூட இரத்தவாடை வீசியபடி அழுகிய பிணங்கள்தான். அன்றைய அவலநாள்களில் எம் இனத்தின் உயிர்களைக் காத்த பெருமையும் தமிழர் தேசத்தின் தேசிய உணவாகிப்போனதும் இதே முள்ளிவாய்க்கால் கஞ்சிதான்.

எந்த நிலை வந்தாலும், ஏதும் இல்லாமல் வெறுமையாகிப் போனாலும் எங்களால் வாழ்ந்துவிட முடியும் என்ற நம்பிக்கையைத் தந்ததும் இந்த உப்பில்லாத அரிசிக் கஞ்சிதான். சுடுகின்ற மணல் வெளிகளிலே செருப்புகள் கூட இல்லாமல் உச்சி வெயில் மண்டையைப் பிளக்க வயதுவித்தியாசமின்றி வரிசையில் இந்தக்கஞ்சிக்காகக் காத்திருந்த பொழுதுகள் தமிழர் வாழ்வின் அழியாத சுவடுகள் ஆகும். பசியால் வாடிய எத்தனையோ பிஞ்சுக் குழந்தைகள், தாய்மார்கள், வயோதிபர்கள் என அனைவரும் வாழத்தவித்த வேளையில் இந்தக்கஞ்சித் துளிகள் அமிர்தமாகிப் போயின. இந்தக் கஞ்சி முழுமையாகப் பசியைப் போக்கவில்லை என்றாலும் அதுவே பலரது மரணத்தைத் தள்ளிவைத்தது.




முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது வெறும் அரிசி நீர் அல்ல. அது ஓர் இனத்தின் கண்ணீரும் துயரமும் போராட்டமும் கலந்த உணர்வுச் சின்னமாகும்.நம் இனம் இன்னும் வீழ்ந்துவிடாமல் வீரத்தோடு போராட வல்லமை தரும் ஒரு சக்திதான் முள்ளிவாய்க்கால் கஞ்சி. இந்தக் கஞ்சி பசியைத் தணிக்கும் உணவாக மட்டுமல்லாமல் இன்று தமிழர்களின் நினைவில் நீதிகேட்கும் ஓர் அகிம்சை ஆயுதமாகவும் மாறியுள்ளது. இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்துதல் என்பது உயிரிழந்த எம் இனத்தவர்களுக்குச் செய்யும் அஞ்சலியாகவும், இனப்படுகொலையை மறக்காமல் நினைவில் வைத்திருக்க உதவுவதோடு, வலிநிறைந்த வரலாற்று எச்சமாகவும் அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தீர்க்கப்படுமா மக்கள் பிரச்சினை?

# புனரமைக்கப்படாத கழிவுநீர் வாய்க்கால்

எஸ்.ஐஸ்வர்யா,
ஊடகக் கற்கைகள் துறை
2ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்

இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டம் என பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துவந்தாலும் ஒவ்வொரு கிராம மக்களினதும் அடிப்படைப் பிரச்சினைகள் என்பது பேசப்பாடாததொன்றாகவே காணப்படுகின்றது. இதற்கு கெருடாவில் கிராமமும் விதிவிலக்கல்ல.

சாவகச்சேரிப் பிரதேசசபைக்குட்பட்ட கெருடாவில் என்ற கிராமத்தில் வசிக்கின்ற மக்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச்செல்வதற்காக பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டுவருகின்றனர். இந்தக் கிராம மக்களின் அடிப்படைப் பிரச்சினையானது எவராலும் பேசப்படவில்லை. தமக்கான ஒரு தீர்வை யாரும் பெற்றுத்தரமாட்டார்களா என்ற ஏக்கத்திலேயே இவர்கள் வாழ்ந்துவருகின்றனர். இக்கிராமத்தின் "மண்டுவில்" என்ற பகுதியில் காணப்படும் கழிவுநீர் வாய்க்காலானது புனரமைக்கப்படாதுள்ளது. இந்த வாய்க்கால் நூறு வருடங்களுக்கு முன்பிருந்து இன்றுவரை மழைநீர் வழிந்தோடும் பகுதியாகவே காணப்படுகிறது. இருப்பினும் குறித்த வாய்க்கால் எந்தவொரு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படாமல் காணப்படுகிறது. ஆரம்பகாலங்களில் அகலமாக வெட்டப்பட்டிருந்ததனால் மழைநீர் விரைவாக வழிந்தோடி "முதலியவெளி" என்ற பகுதியைச் சென்றடைந்தது. தற்போது குறித்த கழிவுநீர் வாய்க்கால், தனிநபர் ஒருவரது தலையீட்டினால் மண் மற்றும் கற்கள் போட்டு நிரவப்பட்டுள்ளதால் நீர் வழிந்தோடுவது தாமதமாகிறது. இதனால் இப்பகுதியை அண்மித்த அயற் பகுதிகளில் மழைநீர் தேங்கி நிற்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலமை அப்பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு பாரிய அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து கிராம மக்கள் சாவகச்சேரி நகராட்சிமன்றத்திலும் சாவகச்சேரி பொலிஸ்நிலையத்திலும் முறைப்பாடுசெய்திருந்தனர். குறித்த வழக்கு இன்றுவரை இடம்பெற்றுக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த வாய்க்கால் தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகவலறியும் உரிமைச்சட்டத்தின்கீழ் 18. 03. 2025 அன்று சாவகச்சேரி நகராட்சிமன்றத்திடம், கெருடாவில் கிராமத்தில் காணப்படுகின்ற கழிவுநீர் வாய்க்கால் எந்தவொரு அரச அமைப்பின்கீழ் கண்காணிக்கப்படுகிறது? குறித்த வாய்க்கால் திட்டம் எந்தக் காலப்பகுதியில் அமைக்கப்பட்டது? குறித்த வாய்க்காலினை பராமரிப்பதற்கு மேற்க்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை? போன்ற வினாக்கள் கேட்கப்பட்ட நிலையில் "கோரப்பட்ட தகவல்களுக்குரிய வாய்க்கால் நகராட்சி மன்றத்தின் ஆதன இடாப்பின் பதிவில் இல்லை" என்பதனை சாவகச்சேரி நகராட்சிமன்றம் குறிப்பிட்டிருந்தது. தற்போது இந்த வாய்க்கால் முறையான கண்காணிப்பிற்குக் கீழோ அல்லது பராமரிப்பின் கீழோ காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தக் கிராமப்பகுதி மக்களிடம் இது தொடர்பாக நேர்காணல் மேற்கொண்டபோது, அவர்கள் சில தகவல்களை வழங்கியபோதும் தமது தனிப்பட்ட அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டாம் என்பதனைக் குறிப்பிட்டிருந்தனர். அந்தவகையில் 50 வயதைக்கொண்ட பெண்ணிடம் இது தொடர்பாகக் கேட்டபோது "வாய்க்கால் அரசாங்கத்தின்ர என்டுதான் நாங்க நினச்சிட்டு இருந்தம். என்ர சின்ன வய்சில இருந்து இந்த வாய்கால் இருக்கு. இப்ப வாய்காலுக்குப் பக்கத்த இருக்கிற வீட்டுக்காரர் தங்கட ரோட்டுக்கான பகுதி எண்டு தங்கட உறுதியில இருக்கு எண்டும் வாய்க்கால் எண்டு இல்ல எண்டும் சொல்லி வாய்க்கால நிரப்பி சின்னனாக்கிட்டினம். மற்றொருவரின்ர உறுதியில அது வாய்க்கால் எண்டுதான் இருக்கு எண்டு சொல்லி பொலிஸில கடிதம் எழுதிக்கொடுத்தாங்க. அதில பாதிக்கப்பட்ட எல்லாரும் சைன் வைச்சாங்க" என்றார்.



இது தொடர்பாக 65 வயதுகொண்ட பெண் கூறியபோது "சிறாப்பசுப்ரமணியம்" என்பவர் பல வருடங்களுக்கு முன்பு வாய்க்காலுக்காக தனது காணியின் ஒரு பகுதியை நன்கொடையாக வழங்கியிருந்தார். இது எழுத்துமூலம் வழங்கப்படவில்லை. வாய்மொழிமூலமே நகராட்சிமன்றத்தின்கீழ் வழங்கப்பட்டிருந்தது. இப்போ வாய்க்காலின் அருகிலுள்ள வீட்டுக்காரர் வந்து தனது உறுதியில வாய்க்கால் எண்டு இல்ல. இது தங்கட பகுதி எண்டு சொல்லினம். ஆனால் பல வருடமாக கழிவுநீர் பாய்ந்தோடும் பகுதியாத்தான் இருக்கு. இதுதொடர்பாக கடிதம் கொடுத்தபடி இருக்கு. வாய்க்காலின் அருகிலுள்ள மூன்று காணி உரிமையாளர்களின் உறுதியில் கழிவுவாய்க்கால் எண்டுதான் இருக்கு. வாய்க்காலுக்காக ஆரம்பத்தில தமது பகுதியைக் கொடுத்தவங்க உறுதியில கழிவுவாய்க்கால் எண்டு இல்ல. இது தொடர்பா யூசி வரைக்கும் மக்கள் சென்றபோது வாய்க்கால் பகுதியைக் கைப்பற்றிய தனிநபர் தனது உறுதியில கழிவுவாய்க்கால் எண்டு இல்ல எனச் சொன்னதால் நகராட்சிமன்றத்தால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கமுடியல்ல. ஆனால் மனஒற்றுமைக்காக நீர் வடிந்தோடவேணும் எண்டதுக்காக வேலிக்கரைவழியா வளைச்சு வெட்டி தண்ணி குளத்துக்குப் போக வெட்டிவிட்டிருந்தவ. ஆனால் தண்ணி வேளைக்கு ஓடிக்குடுக்காம தேங்கி நிக்குது" என்றார்.


**கெருடாவில் கிராம மக்கள் இன்றுவரை தமக்கான நியாயத்திற்காகப் போராடிக் கொண்டுதான் உள்ளனர். ஆனால் அவர்களுக்கான நியாயம் கிடைக்கப்பெறவில்லை. பல வருடங்களாக கழிவுநீர் வாய்க்காலாகக் காணப்பட்ட குறித்த வாய்க்கால் எதற்காக எந்தவொரு அமைப்பின் கீழும் பதியப்பட்டு புனரமைக்கப்படவில்லை என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.**

கெருடாவில் கிராம மக்கள் இன்றுவரை தமக்கான நியாயத்திற்காகப் போராடிக்கொண்டுதான் உள்ளனர். ஆனால் அவர்களுக்கான நியாயம் கிடைக்கப்பெறவில்லை. பல வருடங்களாக கழிவுநீர் வாய்க்காலாகக் காணப்பட்ட குறித்த வாய்க்கால் எதற்காக எந்தவொரு அமைப்பின்கீழும் பதியப்பட்டு புனரமைக்கப்படவில்லை என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. எது எவ்வாறாயினும் மழைக் காலங்களில் நீர்தேங்கி நிற்பதனால் கிராம மக்கள் பாரிய இடர்களை எதிர்கொள்கின்றனர். இது கெருடாவில் கிராம மக்களின் பொதுவான பிரச்சினையாக காணப்படுவதனால், இது தொடர்பாக குறித்த அமைப்புகள் உரிய கவனத்தைச் செலுத்தவேண்டும். இந்தக் கழிவுநீர் வாய்க்கால் அரசாங்க அமைப்பின்கீழ் பதிவுசெய்யப்பட்டு முறையாக புனரமைக்கப்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
07 . 03 . 1973



மறைவு
26 . 05 . 2025

## சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன்

(இந்தியத் துணைத் தூதரக அதிகாரி)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


துயருடன்.
இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம், கொழும்பு.
இந்திய துணைத்தூதுவர் காரியாலயம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வரணி மத்திய கல்லூரி
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
கந்தசாமி அரவிந்தன் - 3A
பௌதிக விஞ்ஞானப்பிரிவு
மாவட்ட நிலை - 26



செல்வன்
கஜேந்திரன் டனுசியன் - 3A
கலைப்பிரிவு
மாவட்ட நிலை - 11



செல்வி
கனகசிங்கம் விதுசா - 3A
கலைப்பிரிவு
மாவட்ட நிலை - 21



செல்வன்
ஜெகந்தன் தனுஸ்ஸன் - 3A
கலைப்பிரிவு
மாவட்ட நிலை - 31



செல்வி
சுரேஸ் சுரேகா - 3A
கலைப்பிரிவு
மாவட்ட நிலை - 48

**உயிரியல் விஞ்ஞானப்பிரிவு**

1. செல்வன் த. தினேஸ் C,2S
2. செல்வன் சி. நிருசன் C,2S

**பௌதிக விஞ்ஞானப்பிரிவு**

1. செல்வன் இ. நிகாஸ் A,2B
2. செல்வி கி. தசானா A,B,C
3. செல்வி வே. ஜிந்துசா 3B
4. செல்வன். சூ. வேணுசன் B,2C
5. செல்வி வ. கவினா B,2C
6. செல்வன் த. சஜிந்தன் 3C
7. செல்வன் சி. சாருசன் 3S

**வர்த்தகப்பிரிவு**

1. செல்வி இ. டர்சிகா 2A,C
2. செல்வி கு. சாருஜா A,B,C

**கலைப்பிரிவு**

1. செல்வி சி. நிலாஜினி 2A,B
2. செல்வி பா. வினேயா 2A,B
3. செல்வி க. நிவேதிகா 2A,B
4. செல்வி யோ. அபிராமி 2A,B
5. செல்வி கு. யசோதா A,2B
6. செல்வன் ஞா. கிஸ்ணா 3B
7. செல்வி ந. செவ்வந்தி A,B,C
8. செல்வி அ. லாவண்யா A,B,C
9. செல்வி இ. பானுகா A,C,S
10. செல்வி வி. புவனேகா 2B,C
11. செல்வி க. ஆர்மிதா B,2C
12. செல்வி. ம. அபினா B,2C

2024 கா.பொ.த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற அனைத்து மாணவர்களையும் வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்.

கல்லூரிச்சமூகம்

அனுசரணை - திரு. மயிலு சின்னராசா (கோகிலா கூல்பார், கொடிகாமம்)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
07 . 03 . 1973



மறைவு
26 . 05 . 2025

**சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன்**
(யாழ். இந்தியத் துணைத் தூதரக கலாச்சார அதிகாரி)


**அன்பொடு பண்பும் சேர்ந்த அரும்பெரும் சொத்து –
மக்கள்
மனங்களில் நிலையாக நின்று நீங்கள் ஆற்றிய
பணிகள் நூறு
"செய்யலாம்..... செய்வம்....." என்ற நேர்மறைச்
சொற்கள் தந்த செம்மலே
தல யாத்திரை என்று சொல்லி நெடு யாத்திரை
சென்றதேனோ?
காற்றிலே வந்த செய்தி கனவாகிப் போகுமென்று
நம்பினோம்
ஈற்றிலே எமையெல்லாம் பாவியாய் தவிக்கவிட்டு
பரமனை நாடினிரோ
போற்றியே புகழும் உந்தன் சேவைகள் பேசும் மக்கள்
ஏற்றியே மனதில் என்றும் நினைவுடன் வாழும் இங்கு.**

**ஏக்கமுடன் அஞ்சலிக்கும்**

**வடக்கு மாகாண அரசாங்க சேவை பட்டதாரி
உத்தியோகத்தர்கள் சங்கம்**

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 03 . 1973



மறைவு
26 . 05 . 2025

**சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன்**
(யாழ். இந்தியத் துணைத் தூதரக கலாச்சார அதிகாரி)

கரவெட்டி, தச்சந்தோப்பைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன் அவர்கள் நேற்று முன்தினம் (26.05.2025) அகால மரணமடைந்தார்.

அன்னார் கரவெட்டி, தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயக் குரு காலஞ்சென்ற சச்சிதானந்தக் குருக்கள்(சின்ன ஐயா) மற்றும் பாகீரதி அம்மாள் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் சீதாலக்ஷ்மி பிரபாகரனின் அன்புக் கணவரும் அக்ஷை, அபிஷேக், ஆகியோரின் பாசமிகு தந்தையும் திவாகரன் அவர்களின் அருமைச் சகோதரரும் சுவாமிநாத ஐயர், இந்துமதி, ஜெகதீஸ்வர ஐயர், இரத்தினகைலாசநாத சர்மா, இராதாகிருஷ்ண ஐயர், கஜலக்ஷ்மி (உதவி அதிபர், கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரத், ஸ்நேஹா, நிதேஷ் ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் அந்திமக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.05.2025), புதன்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 04.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**7/9 A,
பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை,
கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.
077 759 9089
078 568 8366**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

28.05.2025 புதன்கிழமை


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

0778649878, 0776343103


# முன்னாள் அமைச்சர்கள் 40 பேர் விரைவில் கைதுசெய்யப்படுவர்

## விமல் வீரவன்ஸ ஆருடம்

**கொழும்பு, மே 28**

**பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் அமைச்சர்கள் 40 பேரைக் கைதுசெய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

அவர்களின் பெயர்ப்பட்டியல் ஜனாதிபதி செயலகத்தில் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பட்டுள்ளது. திருடர்களைப் பிடிக்காததால்தான் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அரசுக்கு வாக்குகள் குறைந்தன என்று அரசு நம்புகிறது. அதனால் பலரைக் கைதுசெய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவர்களின் பெயர்ப்பட்டியல் ஜனாதிபதி செயலகத்தில் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் எனது பெயரும் உண்டு. காஞ்சன விஜேசேகர, ரமேஷ் பத்திரன உள்ளிட்டவர்களின் பெயர் களும் உண்டு. மஹிந்தானந்த அளுத்கமகேவின் பெயரும் அதில் உண்டு. அவர் கைதுசெய்யப்பட்டுவிட்டார்.

ஓர் அதிகாரி ஒவ்வொரு நாளும் ஜனாதி பதி செயலகத்துக்குச் சென்று இன்று யாரைக் கைதுசெய்வது, நாளை யாரைக் கைதுசெய்வது என்று ஆலோசனை பெறுகிறார். விரைவில் அந்த அதிகாரியின் பெயர் விவரங்களை வாகன இலக்கத்தோடு தெரிவிப்போம்.

இந்த 40 பேரினது பெயர் பட்டியலைத் தயார் செய்தவர்கள் யாரென்றும் எனக்குத் தெரியும். விரைவில் அதையும் சொல்வேன்.

அரசு தனது இயலாமையை மூடி மறைப்பதற்காக, தனது தேர்தல் தோல்வியையே ஈடுசெய்வதற்காக இவ்வாறான வேலையில் இறங்கியுள்ளது - என்றார். (எ-75)


## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி 2025 ( கட்டம் 4)
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலிகாமம் தெற்கு பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர். வலி தெற்கு பிரதேச சபை. சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017. தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2025.05.28 – 2025.06.11 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3.500.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம். பிரதி) 2025.06.12 திகதி 10.30 மணிக்கு முன்னா் தலைவர். பிரதேச பெறுகைக்குழு. வலி தெற்கு பிரதேச சபை. சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள். அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2025.06.04 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02/05/CF / 2025/21 | பூவோடை வீதி புனரமைத்தல், சுன்னாகம் தெற்கு | 2.20 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 30.07.2025 | 23,000.00 | 27.08.2025 வரை |
| 02. | NP/14/41(15)/02/05/CF / 2025/22 | பாடசாலை உப ஒழுங்கை புனரமைத்தல், உடுவில் வடக்கு | 2.20 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 30.07.2025 | 23,000.00 | 27.08.2025 வரை |
| 03. | NP/14/41(15)/02/05/CF/ 2025/23 | தொகுதி 1<br>1. கடவைப்புலம் வீதி உள் ஒழுங்கை அமைத்தல், சுன்னாகம் கிழக்கு<br>2. மயிலனி உப ஒழுங்கை அமைத்தல் (சூராவத்தை), சுன்னாகம் வடக்கு<br>3. சிவபூதராயர் முன் வீதி அமைத்தல், சுன்னாகம் தெற்கு | 2.12 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 30.07.2025 | 22,000.00 | 27.08.2025 வரை |
| 04. | NP/14/41(15)/02/05/CF/ 2025/24 | தொகுதி 2<br>1. காளிகோவில் முன் வீதி அமைத்தலும் (ஏழாலை மத்தி காளிகோவில் வீதி உப ஒழுங்கை) ஏழாலை மத்தி காளி கோவில் வீதி திருத்தம்<br>2. சைவமகாஜனா வீதியின் உப ஒழுங்கை அமைத்தல், ஏழாலை கிழக்கு<br>3. காளிகோவில் உப ஒழுங்கை அமைத்தல், ஏழாலை கிழக்கு | 2.30 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 30.07.2025 | 23,500.00 | 27.08.2025 வரை |
| 05. | NP/14/41(15)/02/05/CF/ 2025/25 | தர்மலிங்கம் வீதி புனரமைத்தல், இணுவில் மேற்கு – கட்டம் 1-A | 4.78 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 30.07.2025 | 48,000.00 | 27.08.2025 வரை |
| 06. | NP/14/41(15)/02/05/CF- D/ 2025/26 | தொகுதி 3<br>1. உடுவில் மகளிர் கல்லூரி மேற்கு வீதி இரண்டாம் ஒழுங்கை அமைத்தல், உடுவில் வடக்கு<br>2. சிவபூதவராயர் கோவில் தெற்கு முன் வீதி அமைத்தல் சுன்னாகம் தெற்கு | 3.64 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 30.07.2025 | 37,000.00 | 27.08.2025 வரை |

தலைவர்
பிரதேச பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

2025.05.28

(C045098) J4


## வெங்காயச்செய்கை யாழில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 28

யாழ்.குடாநாட்டில் சிறுபோகத்துக்கான வெங்காயச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் சீரற்ற காலநிலையாலும் மழை அடிக்கடி விட்டு விட்டுப் பெய்வதாலும் அநேகமான செய்கையாளர்கள் வெங்காயச்செய்கையில் அதிக அக்கறை செலுத்தவில்லை.

அத்துடன் வெங்காயச் செய்கைக்கான விதை வெங்காயத்துக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-41-17)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 28

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் -7 நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ.த.குமரனின் "குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்" எனும் விடயப் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-41)

## வருடாந்தத் திருவிழா

சாவகச்சேரி சப்பச்சி மாவடி விநாயகர் கோவில் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 10 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப் பட்டது. (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

### சங்க அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

எமது சங்க கிளைக்குழு தேர்தலுக்காக 30.04.2025ல் மூடப்பட்ட அங்கத்தவர் பெயர் விபரமடங்கிய வாக்காளர் பட்டியல்கள் **28.05.2025** தொடக்கம் **13.06.2025** வரை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றை பின்வரும் எமது விற்பனை நிலையங்களிலும் தலைமைக் காரியாலயத்திலும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

| கிளை இலக்கம் | காட்சிப்படுத்தும் விற்பனை நிலையங்கள் |
|---|---|
| 01 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 02 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 03 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 04 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 05 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 06 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 07 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 08 | கிளை 12 கே.கே.எஸ் வீதி மல்லாகம் சந்தி |
| 09 | கிளை 9 கல்லாரை மல்லாகம் |
| 10 | கிளை 12 கே.கே.எஸ் வீதி மல்லாகம் சந்தி |
| 11 | கிளை 1 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 12 | கிளை 12 கே.கே.எஸ் வீதி மல்லாகம் சந்தி |
| 9A | கிளை 9 கல்லாரை மல்லாகம் |

கிளி/அள.மல் அங்கத்தவர்கள் - கிளை 1 கூட்டுறவாளர் வீதி அளவெட்டி

வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்களில் திருத்தங்கள் இருப்பின் அவற்றையும், தங்கள் பெயர் இடம்பெறாதிருப்பின் அவை பற்றிய விபரங்களையும், இறந்த அங்கத்தவர்கள் விபரம் தொடர்பான ஆட்சேபனை விபரங்களையும் **13.06.2025** ற்கு முன்னர் சங்க செயலாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்** **செயலாளர்**

## செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம், மே 28

கொடிகாமம் துர்க்கா மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு துர்க்கா மழலைகள் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற வுள்ளது.

முகாமைத்துவக் குழுத்தலைவர் திருமதி சிவசுதன் விஜிதா தலைமையில் நடை பெறவுள்ளநிகழ்வில்பிரதமவிருந்தினராக பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் இலங்கை முதலுதவிச்சங்க இந்து சம யத் தொண்டர் சபையின் தேசியக் கண் காணிப்பாளரும் கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்தி சபைச் செயலாளரு மான கலாநிதி வை.ஜெகதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (ச-41-159)

## உள்ளூராட்சி விழா

யாழ்ப்பாணம், மே 28

வேலணைப் பிரதேசசபையின் உள்ளூ ராட்சி விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.வேலணை மத்திய கல்லூரி துரைச்சாமி மண்டபத் தில் இடம்பெறவுள்ளது.


வேலணைப் பிரதேசசபைச் செயலாளர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடை பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண உள்ளூ ராட்சித் திணைக்கள ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உத விச் செயலாளர் இ.குருபரன் கௌரவ விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைச் செயலாளர் க.கம்ச நாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள் ளனர். (ச-41)

## கூட்டுறவு வங்கிகளின் சமாசத்தின் புதிய கட்டடத்தொகுதி திறப்பு இன்று

யாழ்ப்பாணம், மே 28

யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிக ளின் சமாசத்தின் புதிய கட்டடத்தொகுதி திறப்பு விழா கே.கே.எஸ் வீதி இல 95, சமாசம வளாகத்தில் இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சமாசத்தின் தலை வர் ப.கேசவதாசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந் தினராக வட மாகாண கூட்டுறவு அபிவி ருத்தி ஆணையாளர் ந. திருலிங்க நாதன், சிறப்பு விருந்தினராக யாழ். கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரன், கௌரவ விருந்தினர்க ளாக யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் முன்னாள் தலைவர் செ.செல்வராசா, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.விஜய மோகனராஜா, சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. செல்வகுமார் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்னர்.(ச- 25)

## மரண அறிவித்தல்



### சின்னையா விஸ்வலிங்கம் (இன்பம்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளை, கட்டுவன், ஈழகேசரி பொன்னையா (குரும்பசிட்டி) வீதியை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா விஸ்வலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (26.05.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம் தம்பதியரின் மகனும், கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், கமலாதேவியின் (ராணி) அன்புச் சகோதரனும், ஜீவனா (முகாமைத்துவ உத்தியோகத்தர், வீடமைப்பு அதிகாரசபை, யாழ்ப்பாணம்), துஸ்யந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலகம் - கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீரங்கேஸ்வரன் (பருத்தித்துறை பிரதேசசபை முன்னாள் தவிசாளர்), ஷாலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - தெல்லிப்பளை) ஆகியோரின் மாமனாரும், அக்ஷ்மன், பவிஷா (மகாஜனா கல்லூரி மாணவர்கள்), அனிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பளை கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 162 9721**


**கட்டுவன், ஈழகேசரி பொன்னையா வீதி,**
**தெல்லிப்பளை.**

## யா/ புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

யா/ புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 10.06.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் பொதுக்கூட்டத்தில் சகல பழைய மாணவர்களையும் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/ புனித அந்தோனியார் கல்லூரி**
**ஊர்காவற்றுறை**

## கண்ணீர் அஞ்சலி



யாழப்பாணம் இந்திய துணைத்தூதரக அலுவலர்
**பிரம்மஸ்ரீ**
**சச்சிதானந்தக்குருக்கள் பிரபாகரசர்மா**

அவர்கள் நேற்று முன்தினம் (26.05.2025) திங்கட்கிழமை அன்று திடீர் மறைவுச் செய்தி கேட்டு மீளாத்துயர் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கிளிநொச்சி, மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியம் | முல்லைத்தீவு, மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சரவை...

இடம்பெறவுள்ளதாக அண்மைக்காலமாகத் தகவல்கள் வெளிவந்திருந்த நிலையிலேயே, அந்தத் தகவல்கள் பொய்யானவை என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒன்றிணைந்து ஒற்றுமையாக வேலை செய்வதற்காகவே மக்கள் எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைத் தந்துள்ளனர்.

அமைச்சரவையில் மாற்றம் செய்வதாக இருந்தால் ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில்தான் செய்வோம். தனிநபர்களை இலக்குவைத்து எந்த மாற்றங்களையும் மேற்கொள்ளமாட்டோம். இப்போது அமைச்சரவையில் மாற்றம் செய்யவேண்டிய அவசியங்கள் எவையும் எழவில்லை.

நாம் ஆட்சியமைத்து ஏழு, எட்டு மாதங்கள் ஆகின்றன. எமது இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம். இந்த வருடத்தின் முதல் காலாண்டில் ஏற்றுமதி வருமானம் 5.59 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது கடந்த வருடத்தைவிட அதிகரிப்பாகும். அப்படியென்றால் இதனுடன் தொடர்புபட்ட அமைச்சரவையை மாற்றவேண்டுமா? ஊழல், மோசடி இடம்பெற்றுள்ளதா? அமைச்சர்கள் திருடியுள்ளார்களா? அப்படி நடந்திருந்தால் அடுத்தவர்கள் சொல்லும் முன்பே நாம் அமைச்சரவையை மாற்றுவோம். இவை எவையும் இடம்பெறாதபோது எதற்காக நாங்கள் அமைச்சரவையை மாற்றவேண்டும். ஆட்சியை வீழ்த்த வேண்டிய தேவை சிலருக்கு உள்ளது. அவர்களால் பரப்பப்படும் கதைதான் இது - என்றார். (அ-ம-75-44)

## வர்த்தமானி...

மார்ச் மாதம் 28ஆம் திகதியன்று அரசாங்கத்தால் காணி சுவீகரிப்புத் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. 2430ஆம் இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்த அந்த வர்த்தமானி அறிவித்தலில், வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என்றவாறாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தலுக்குத் தமிழ் அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். அத்துடன், அதனை உடனடியாக திரும்பப் பெறுமாறும் வலியுறுத்தியிருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, குறித்த வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் மீளப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## மயங்கிச்...

இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவருக்கு கடந்த 22ஆம் திகதி தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் பித்தப்பையில் உள்ள கல்லை நீக்குவதற்காக சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து சில மணிநேரங்களில் அவர் மயக்கமடைந்துள்ளார். பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர் நேற்று உயிரிழந்தார். இறப்புக்கான காரணங்கள் கண்டறியப்படாத நிலையில், சடலத்தில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு அவை மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## பிரபாகரனை...

வித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு புலிப் பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ளது. தேர்தல் காலத்தில் அவர்களுடன் கொடுக்கல் வாங்கல்களிலும் அரசாங்கம் ஈடுபட்டிருக்கலாம். நிதி உதவிகூட கிடைக்கப்பெற்றிருக்கக்கூடும். கனடாவில் இனவழிப்பு நினைவகமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஸ்ரீலங்காவின் தரப்பில் கடும் எதிர்ப்புகூட வெளியிடப்படவில்லை. சம்பிரதாயபூர்வமாகவே எதிர்த்தனர். முள்ளிவாய்க்கால் மற்றும் கொழும்பில்கூட இனவழிப்பு நினைவுகூரப்படுகின்றது. ஆனால் ஆட்சியாளர்கள் போர் வீரர்களுக்குரிய கௌரவத்தை வழங்கவில்லை.

புலம்பெயர் புலிகளுக்கு மனம் வலிக்கும் என்பதால்தான் இராணுவத்தினரை 'போர் வீரர்கள்' என்று குறிப்பிடாமல் சிப்பாய்கள் என்று ஆட்சியாளர்கள் அழைத்துள்ளனர். இதன்மூலம் போர்க்காலத்தில் இருந்த சர்வதேச அழுத்தங்கள் தற்போதும் தொடர்கின்றமை தெளிவாகின்றது.

இறுதிக்கட்டப் போரின்போது வடக்கு கடற்பரப்பை அண்மித்து அமெரிக்காவின் மெரைன் படையணியின் கப்பலொன்று வந்தது. சர்வதேச கடற்பரப்பில் அது நிறுத்தப்பட்டிருந்தது. பொட்டு அம்மான், பிரபாகரன் உள்ளிட்டவர்களை உயிருடன்தம்மிடம் ஒப்படைக்குமாறு அவர்கள் கோரினார்கள். எதற்காக இது? இலங்கையைப் பிரிக்கவேண்டும் என்பதே அந்த சக்திகளின் நோக்கம். அந்த தேவைக்காகவே புலிகள் அமைப்பு செயற்பட்டது. எமது நாட்டில் பாடப்புத்தகத்தில் போர் வீரர்களை உள்ளடக்கமுடியாதுள்ளது. ஆனால் கனடாவில் பாடப்புத்தகத்துக்குள் இனவழிப்பு உள்வாங்கப்பட்டுள்ளது. இப்படிதான் சர்வதேச அழுத்தம் தொடர்கின்றது - என்றார். (அ-ம-44)

## முதலமைச்சர்...

வேட்பாளராக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நிறுத்தப்படலாம் என்று அண்மைக்காலமாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான நிலையில், மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பேரவையின் நிலைப்பாடு என்ன என்று? கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் ஊடகவியலாளர்கள் வினவியிருந்தனர்.

இதையடுத்தே, 'தற்போது வெளிவரும் முதலமைச்சர் வேட்பாளர்களின் பெயர்களை கருத்திற்கொண்டால் நாங்கள் ஒரு தும்புத்தடியை வேட்பாளராக நிறுத்தலாம்' என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறினார். (அ-ம-26)

## தும்புத்தடி...

தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் வேட்பாளராக தும்புத்தடியை நிறுத்தும் அளவுக்கோ அல்லது தும்புத்தடிக்கு வாக்கிடும் அளவுக்கோ தமிழ்த் தேசிய அரசியல் ஒன்றும் நலிந்துவிடவில்லை. தும்புத்தடிக்கு வாக்கிடும் அளவுக்கு தமிழர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர். எனவே சுமந்திரனுக்கு எதிராக ஒரு தும்புத் தடியை நிறுத்த எண்ணுகிறோம் என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் கட்சித்தலைவர் கஜேந்திரகுமார் கூறியமை அரசியலில் அவர் இன்னும் பக்குவப்படவில்லை என்பதனையே எடுத்துக்காட்டுகிறது. இந்தக் கூற்று மாற்றுத் தலைமை ஒன்று உருவாவதைத் தடுக்கும் நோக்கிலானதா எனவும் சிந்திக்கவைக்கிறது.

பொதுவேட்பாளர் விடயத்தில் இவர் சிறுபிள்ளைத்தனமாக எடுத்த தீர்மானத்தால் சினமுற்ற தமிழினம் பொதுத் தேர்தலில் தமது நோக்கை எச்சரிக்கையாக வெளிப்படுத்தியது. ஸ்ரீகாந்தா, ஜங்கரநேசன், தவராஜா முதலான தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சக்திகள் நாவடக்கத்தை இவருக்கு கற்பிக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றேன் - என்றார். (அ-ம-26)

## போதைக்கு...

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், ஐஸ் போதைப்பொருளுடன் கைதான 26 வயது யுவதி நீதிமன்ற உத்தரவுக்கு அமைய புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி நேற்றுமுன்தினம் 340 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, ஐஸ் போதைப்பொருள் பாவித்திருந்தார் என்பது தெரியவந்தது.

இதையடுத்து மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தியதைத் தொடர்ந்தே, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய ஆறு மாதங்கள் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளார். (அ-ம-27)

## பனை...

தாக, அவருக்கு அனுப்பிவைத்துள்ள பதவிநீக்கக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து, தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த ஏழு மாத காலப்பகுதிக்குள் பனை அபிவிருத்திச் சபைக்கு மூன்றாவது தலைவரை புதிதாக நியமிக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக கிருஷ்ணராஜா பத்திராஜா என்பவர் செயற்பட்டுவந்த நிலையில், ஜனாதிபதியாக அநுர பதவியேற்ற பின்னர் அவர் உடனடியாக அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் இடத்துக்கு கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி இ.செல்வின் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், வெறும் ஒருவாரத்தில் அவரும் பதவி நீக்கப்பட்டு, ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி வி.சகாதேவன் புதிய தலைவராகப் பதவியேற்றிருந்தார். இந்த நிலையில், நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவரும் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

ஒரு திணைக்களத்தின் வெற்றி, அந்தத் திணைக்களத்தின் தலைமைத்துவத்திலும் உள்ளது. எனவே, அடிக்கடி இவ்வாறு தலைமைத்துவத்தை மாற்றும் அரசாங்கத்தின் செயற்பாடு திணைக்களத்தின் எதிர்காலத்தை வீழ்ச்சியடையச் செய்யும் என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-26)

## நீண்ட...

கிடைத்த வெற்றி - இவ்வாறு தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மார்ச் மாதம் 28ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட காணி தொடர்பான வர்த்தமானி மீளப்பெறப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி மீளப்பெறப்பட்டிருப்பது வடமாகாண மக்களுக்கு கிடைத்த பெருவெற்றியாகும். இந்த வர்த்தமானி விவகாரத்தை நான் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புப் பிரேரணையாகக் கொண்டுவந்தபோது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இதனை ஆமோதித்து முன்னெடுக்க உதவினார். அதுபோல், நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவும் தனது ஆதரவை வழங்கினார்.

இதேவேளை தமிழ்த் தேசியப் பேரவையாக நாம் இந்த விடயங்கள் தொடர்பாக உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களைச் சந்தித்து கருத்துகளைப் பகிர்ந்திருந்தோம். இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ள ஆபத்துகள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தோம். அவர்களுடைய அழுத்தம் இல்லாமல் இந்த வர்த்தமானி மீளப்பெறப்பட்டிருக்காது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்ச்சியாக இனங்களுக்கிடையே பிரச்சினைகளை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. நாடாளுமன்றில் ஒத்திவைப்பு பிரேரணையில்கூட பிமல் ரத்நாயக்க எம்மை நிராகரிப்பது போல பேசினார். தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவ்வாறே நடந்துகொண்டார். ஆனால், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரின் பேச்சு, தமிழர்களுக்கு உறுதுணையாக அமைந்தது. பிரதமர் முன்னெடுத்த கலந்துரையாடலில்கூட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராகவே, முஸ்லிம் காங்கிரஸ் தனது வலுவான நிலைப்பாட்டைப் பதிவுசெய்தது. அவர்களின் நிலைப்பாடு தேசிய மக்கள் சக்தியின் பிம்பத்தை உடைத்தது. ஒற்றையாட்சியை ஓர் ஆரம்பப் புள்ளியாக அடையமுடியாது என்பதில் முஸ்லிம் மக்களும் தமிழர்களும் இணைந்து செயற்படுகின்றபோது, நிச்சயம் நல்லதொரு தீர்வை எம்மால் கண்டுகொள்ள முடியும் என்பதற்கு இந்த வர்த்தமானி அறிவித்தல் ஒரு சான்றாகும் - என்றார். (அ-ம-125-66-26-20)

## காலக்கெடுவுக்கு...

சுமந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் காணிச் சுவீகரிப்புத் தொடர்பில் பிரசுரிக்கப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலை திரும்பப்பெற்றமைக்காக ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் நான் நன்றியைத் தெரிவிக்கின்றேன். நாம் விதித்த காலக்கெடுவுக்கு முன்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்படுள்ளமையை வரவேற்கின்றேன். வர்த்தமானி கைவாங்கப்பட்ட விடயம், உடனடியாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவேண்டும் - என்றார்.

மே மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படவில்லையென்றால், மக்களைத் திரட்டி மிகப்பெரும் போராட்டத்தை மேற்கொள்வோம் என்று சுமந்திரன் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கைநெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் ஆறு மாத குறுங்கால முழுநேரக் கற்கைநெறிகள் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கணிய அளவை உதவியாளர், மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் பழுதுபார்த்தல், கணிணி வன்பொருளுக்கான சான்றிதழ், கணிணி வலையமைப்புக்கான சான்றிதழ், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் சான்றிதழ், கைத்தொலைபேசி பழுது பார்த்தல் சான்றிதழ், ஆடை தைத்தல் சான்றிதழ், அலுமினியம் பொருத்துநர் சான்றிதழ், மின்னியலாளர் போன்ற கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயில விரும்புவோர் எதிர்வரும் ஜீன் மாதம் 15 திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு தொழில்நுட்பக்கல்லூரியுடன் அல்லது 0212212403 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-33)

**காணி விற்பனைக்கு உண்டு**

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயில் வீதியில் 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு 077 794 8012

**வாடகைக்கு**

வீடு / காரியாலய உபயோகத்திற்கு
55 அடி நீளம், 44 அடி அகலம், பரப்புடைய
மாடி வீடு வாடகைக்கு உண்டு.
இடம் : டச்சு வீதி, சாவகச்சேரி.
தொடர்புகளுக்கு:-
077 675 7249
(CS/58401) J-1

**பராமரிப்பாளர் தேவை**

நுணாவில் சந்திக்கு அருகாமையில் வீட்டையும் காணியையும் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை தங்குமிட வசதியும் உண்டு (இருவர் கொண்ட குடும்பம் விரும்பத்தக்கது) சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 201 3654

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 27 பரப்பு காணி விற்பனைக்குண்டு 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

- பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோயில் முன், வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம் செம்மண் காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள காணி

ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு - 076 739 0413
077 623 4204

பல்வேறு சாதனைகளுடனான வெற்றியுடன்

# 'குவாலிபையர்' ஆட்டத்துக்கு தகுதிபெற்றது பெங்களூர்!

நாளை பஞ்சாப்புடன் பலப்பரீட்சை

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், லக்னோ நிர்ணயித்த மிகப்பெரிய இலக்கை எட்டி குவாலிபையர் ஆட்டத்துக்குத் தகுதிபெற்றது பெங்களூர்.**

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அணித்தலைவர் பன்ட் 118 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 67 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு ஆரம்ப வீரர்களான கோலி மற்றும் பில் ஷோல்ட் இருவரும் பலமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். பில் ஷோல்ட் 30 ஓட்டங்களுடனும், கோலி 54 ஓட்டங்களுடனும் வீழ்த்தப்பட்டனர். படிதார் 14, லிவிங்ஸ்டன் 0 அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். 123 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது பெங்களூர். பெங்களூரின் வெற்றி சாத்தியமில்லை என்ற நிலையில் களமிறங்கினார் அணித்தலைவர் ஜிதேஸ் சர்மா. 33 பந்துகளில் 8 பவுண்டரிகள், 6 சிக்சர்கள் உள்ளடங்கலாக 85 ஓட்டங்களை அவர் விளாசினார். மயங் அகர்வாலும் 41 ஓட்டங்களைப்பெற முடிவில் 8 பந்துகள் மீதமிருக்கையில் வெற்றிபெற்றது பெங்களூர்.



ஐ.பி.எல். தொடரொன்றில், சொந்த மைதானத்துக்கு வெளியே 7 வெற்றிகளைப் பெற்ற அணி, லக்னோ மண்ணில் அதிகூடிய ஓட்டங்களை விரட்டிய அணி என்ற சாதனைகளுடன் பெங்களூர் அணி குவாலிபையர் ஆட்டத்துக்குத் தகுதிபெற்றது.

நாளை நடைபெறவுள்ள குவாலிபையர் ஆட்டத்தில் பஞ்சாப் மற்றும் பெங்களூர் அணிகள் மோதவுள்ளன. நாளைமறுதினம் நடைபெறவுள்ள எலிமினேட்டர் ஆட்டத்தில் குஜராத், மும்பை அணிகள் மோதவுள்ளன. (ம)

## முதியவர் மர்மச்சாவு

மன்னார், மே 28

மன்னார் மடு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ராதாகிருஷ்ணன் (வயது-65) என்ற முதியவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் முதல் அவரைக் காணவில்லை என்று குடும்பத்தினர் தேடிச் சென்றபோது, வீட்டுக்குப் பின்புறமாக உள்ள காட்டுப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-213)

## ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்!

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒரே தடவையில் ஐந்து குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 24ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குழந்தைகள் தற்போது நலமுடன் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)



## மாடு கடத்திய குற்றச்சாட்டில் ஐவர் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம், மே 28

மாடுகளைக் கடத்திய குற்றச்சாட்டில் ஐவர் காரைநகர் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விதான பத்திரனவின் கீழ் இயங்கும் பொலிஸ் குழு இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள் ளனர். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-41-27)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org